[4th March 1969

Arrests en masse by Police in Thalavaipuram.

* 107 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased o state the reason for the arrears of 300 persons en masse by the Police in January 1968 at Thalaivaipuram in Rajapalayam of Ramanathapuram district?

தளவாய்புரத்தில் பலர் கைது செய்யப்பட்ட சம்பவம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

இராமநாதபுரம் மாவட்ட ராஜபாளையம், தளவாய்புரத்தில் மொத்தமாக 300 பேரை 1968 ஜனவரி மாதத்தில் போலீசார் கைது செய்த காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 7—1—1968. காலை முதல் 15 நாட்களுக்கு ராஜபாளையம் வட்ட மாஜிஸ்திரேட் குற்ற நடைமுறை சட்டக் கோவையின் 144-வது பிரிவின் கீழ்ச் சாற்றிய தடையுத்தரவை மீறியதற்காக 7—1—1968 தேதியன்று தளவாய்புரத்தில் 330 (முன்னூற்று முப்பது) பேரை (300 பேரல்ல) காவலர் கைது செய்தனர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, 330 பேரும் மொத்தமாகக் கைது செய்யப்படக் காரணம் என்ன ? அவர்கள் மீது என்ன வழக்கு தொடரப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் தடையுத்தரவை மீறினார்கள் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார்கள். 144, 143, 147, 341, 188 ஐ.பி.சி. படி 16 வழக்குகள் திருவில்லிபுத்தூரில் போடப்பட்டன.

Congress meeting held at Sivakasi.

* 108. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether some people indulged in pelting of stones in the Congress meeting held at Sivakasi in February 1968; and

(b) the result of the case booked by the Police in this regard?

சிவகாசியில் நடந்த காங்கிரஸ் பொதுக்கூட்டம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிவகாசி காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் 1968 பிப்ரவரியில் சிலர் கற்கள் வீசினார்களா ?

(இ) இது சம்பந்தமாக போலீசார் பதிவு செய்த வழக்கின் முடிவென்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இது சம்பந்தமாக 33 பேர்கள் மீது போலீசார் வழக்கு தொடுத்தனர். அவற்றில் 19 பேர்கள் மீது குற்றம் ருசுவாக்கப் படவில்லை. மீதி 14 பேர்களில் 2 பேர்கள் மீது சிறுசிறு வழக்குகள் (petty cases) தொடரப்பட்டன. அதில் ஒருவருக்கு ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டது. மற்றொருவர் கோர்ட்டாரால் விடுதலை செய்யப்பட்டார். மீதியுள்ள 12 பேர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் இவர்கள் 12 பேரும் விடுதலை செய்யப் பட்டனர்.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, சிவகாசி பொதுக்கூட்டத்தில் உணர்ச்சியைத் தூண்டும் அளவுக்குப் பேசிய தாகத் தெரிகிறது. அப்படிப் பேசிய பேச்சாளர் யார்? கல் எறி யும் அளவிற்கு அங்கே என்ன பேசப்பட்டு அந்த சூழ்நிலை உருவாயிற்று ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேசிய பேச்சாளர் பெயர் விவேகி தான். ஆனால் அவர் பேசிய பேச்சு என்னவென்றால், "அண்ணாதுரை, ஈ.வே.ரா. பெரியாரிடம் ரூ. 40 சம்பளத்துக்குச் செருப்பைத் தூக்கி, எச்சில் தட்டைக் கழுவ வேலை பார்த்து வந்த பயல் இன்றைக்கு முதல் மந்திரி, அந்தக் காலத்து சமஸ்தான வித்துவான்கள், குட்டி ராஜாக்கள் எல்லாம் நாட்டைவிட்டு சொத்துக்களை இழந்து அவர்கள் பெண்டாட்டிகள் எல்லாம் ஆப்பக்காரிகளாகவும், இட்லிகாரிகளாகவும் ரோட்டில் திரிகிறார் களே ; இன்றைய இந்த அண்ணாதுரைக்கு முதல் மந்திரி பதவி போனால் அவர் பெண்டாட்டி இட்லி சுட்டு விற்பாளா? கருணாநிதி பயல், நெடுஞ்செழியன் பயல், தருதலைப்பயல்கள், எல்லாம் மந்திரியாக வந்துவிட்டு கொள்ளை அடிக்கிறார்கள். லட்சம் லட்சமாக சேர்க்கிறார்கள்". இதுதான் அங்கே பேசப்பட்ட கண்ணியமான பேச்சு.

National flag.

* 109 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Public Works Minister (present Chief Minister) declared during his speech at Madurai recently, that action will be taken against those who burn the National Flag; and

(*b*) if so, the number of such crimes filed during the months of April, May and June 1968?

தேசியக்கொடி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) அண்மையில் மதுரையில் பொதுப்பணி அமைச்சர் (தற்போதைய முதலமைச்சர்) அவர்கள் பேசும்பொழுது தேசிய கொடியை எரிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியது உண்மையா ?